17.06.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 114 /2016 ) திருமதி.உலகம்மாள்.

4 ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை–

1) எனக்கு எதிராக என்ன வழக்கு போடப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். நான் குடியிருந்து வரும் வீடு நகராட்சி எல்லைக்குள் இருந்து வருகிறது என்றால் சரிதான். சர்வே எண்.32 ல் உள்ள தெரு கோவில்பட்டி நகராட்சிக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை எனக்கும், எங்கள் பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட தெரு. எனக்கும், எனது பங்காளிகளுக்கும் பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணம் வைத்துள்ளேனா என்றாலும் அதற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எங்கள் வீடு பங்காளிகள் வீடு எங்கு பார்த்து அமைந்துள்ளது என்றால் எங்கள் வீடு வடக்கு பார்த்து உள்ளது. மற்றோரு 2 பங்களிகளின் வீடும் வடக்கு பார்த்து தான் உள்ளது.ஒரு பங்காளி வீடு மேற்கு பார்த்து உள்ளது. சர்வே எண்.32 தெரு நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட தெரு என்றும் அதில் எனக்கோ, எனது பங்காளிகளுக்கோ பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் பொதுமக்களோ, நாங்களோ ஆக்கிரமிக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.32 க்கு எங்களது வகையறாக்களுக்கு உரிமையில்லை என்பதால் தான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
17.06.2026.